ஓம் தத் ஸத்.

ஏகமேவாத்விதீயம்.

# தத்துவபோதினி.

பு. ௩.] சென்னைப்பட்டணம் ௧௮௯௭ஷு ஜனவரிமீ ௧௫௨. [இல. ௯.

ஏகமேவாத்விதீயம், ஸத்யம்ஜ்ஞாநமநந்தம்ப்ரஹ்ம, [illegible]

ஸத்யமேவஜயதே நாந்ருதம்.

## விஷய அட்டவணை.


| | பக்கம். | | பக்கம். |
|---|---|---|---|
| ௧. கடவுள்துதி | ௧௫௭ | திருபங்கள். | |
| ௨. விளம்பரங்கள் | ௧௫௮ | ௭. உபந்நியாஸம் | ௧௬௨ |
| ௩. தத்துவபோதினி | ௧௫௯ | ௮. தஞ்சைநகர்தர்மசபை | ௧௬௬ |
| ௪. வேளாண்மை | ௧௬௦ | ௯. பட்டுக்கோட்டைபிரமசபை | ௧௬௧ |
| ௫. மதநூல் | ௧௬௧ | ௧௦. சந்தேகம் | ௧௭௧ |
| ௬. உபநிஷத்து | ௧௬௨ | ௧௧. தஞ்சைவேதசமாஜம் | ௧௭௩ |


சத்தியமே சக்தி—தத்துவமே சித்தி.

### கடவுள்துதி.

இராகம்- யதுகுலகாம்போதி- சாபுதாளம்.

பல்லவி.

பேரானந்தப்பெருங்கடலில்மூழ்கப் - பிரமாபருள்புரிவாய்.

அநுபல்லவி.

பாரிற்றுன்பங்கட்டுப் - பயந்துகின்னடியினே,

சேருமடியாரைத் தேற்றியபயந்தந்து............(பேரா.)

சரணங்கள்.

க. பூரியர்தொடர்பையெ - ப்போதும்நாடாமலே,
பேரறிவளர்நட் - பென்றும்விடாமலே,
சீராம்நன்னெறிதனில் - சென்றுநின்னேவலே,
நேராய்செலுத்தியுனை - நேசிக்கவழிவிந்து............(பேரா.)

உ. அஞ்ஞானவிருளினில் - அழுந்திமயங்குமெம்மை,
சுஞானவொளிகாட்டிச் - சுகவழியினிற்செம்மை,
துர்ஞானப்பகைஞரால் - துயருறுமலேகாத்து,
மெய்ஞ்ஞானிகள்பெறும் - மேனிலையில்சேர்த்து......(பேரா.)

ங. உலகவின்பங்களில் - ஒன்றும்நிலையில்லை,
அலகிலாத்துன்பத்தில் - ஆழ்த்தும்பெருந்தொல்லை,
பலகாலுமனுபவ - ப்பட்டும்அறிவில்லை,
சலசித்தராதலின் - சார்ந்தோம்நீவேறல்லை......... (பேரா.)

## விளம்பரம்.

இந்தச் சென்னைத் தத்துவபோதினியை வாங்க மனமுடையவர்கள் மயிலாப்பூரில் தத்துவபோதினி அச்சுக்கூடத்தில் வேதஸமாஜத்தின் காரியதர்சியாகிய-பா. சுப்பராயலு செட்டியார், பி. ஏ. பி. எல். அவர்களுக்கு எழுத்துமூலமாய்த் தெரிவித்துக்கொள்ளவேண்டியது.

## இதற்குச் சந்தாவிவரம்.

சென்னைப்பட்டணத்தி லுள்ளவர்கள் வருஷம் ஒன்றுக்கு ரூபாய்.................... க - அ - 0

அதற்கு வெளியிலுள்ளவர் தபால் கூலியுடன் சேர்த்து வருஷம் ஒன்றுக்கு ரூபாய். உ - 0 - 0

ஐந்துப்பிரதிகளுக்கு அதிகமாய் வாங்கும் வெளியிலுள்ளவர்கள் தபால்கூலியுடன்சேர்த்து வருஷம் ஒன்றுக்கு ரூபாய்.................... க - கஉ - 0

இதற்குச் சந்தாதார்கள்தங்கள்சந்தாக்களை யந்தந்த வருஷத்தில் முன்பணமாய்க் கட்டவேண்டியது. மேமாசத்துக்கு மேமாசம் இதற்கு வருஷமாய்க்கொள்ளவேண்டியது. வருஷம் நடுவில் வாங்கத்தொடங்குவோர்க்குச சந்தாவீதம் - ஆ- அணு உயர்த்தப்படும்.

வெளியிலிருந்துசந்தா அனுப்பவேண்டியவர்கள் தபால் முத்திரைகளனுப்பலாம். ஆனால், அப்படி யனுப்பப்படும் முத்திரைகளை மாற்றுவதர்க்காக,ரூபாய் ஒன்றுக்கு - ஒரு அணு வீதம்-வட்டம்சேர்த்து அனுப்பவேண்டியது.

இந்தப் பத்திரிகையின் சந்தாதாரர்களும், பங்குக்காரர்களும், இடம் மாறும்போது அந்தவிவரத்தைத் தயைசெய்து காரியதர்சிக்குத் தெரிவிக்கவேண்டியது.

## புஸ்தகவிளம்பரம்.

கிரந்தத்திலும், தமிழிலும் இயற்றப்பட்டபாலவியாகரணம்.0 - ச - 0
தபால்கூலி............ 0 - ௧ - 0

தெலுங்கு பாலவியாகரணம்... 0 - ச - 0
தபால்கூலி........... 0 - க - 0

வேதஸமாஜத்தார் முதல் விண்ணப்பம் அர்ச்சையைக்குறித்து நன்றாய் பயிண்டுசெய்தது........................ 0 - அ - 0
தபால்கூலி........... 0 - உ - 0

ஷெ மட்டபயிண்டுள்ளது..... 0 - எ - 0
தபால்கூலி........... 0 - உ - 0

வேத சமாஜத்தார் இரண்டாவது விண்ணப்பம் பெண்கள் கல்வியைக்குறித்தது........ 0 - அ - 0
தபால்கூலி........... 0 - உ - 0

தெலுங்கில் ஸ்தோத்திரபாடம். 0 - க - 0
தபால்கூலி........... 0 - க - 0

கஅகூரு௵ மேமாசம் முதல் கஅகூகூ௵ எப்பிரல்மீ வரையிலுள்ள தத்துவபோதினி பயிண்டுசெய்தது. ...... ரு - 0 - 0
தபால்கூலி........... 0 - ச - 0

வசனக்கலம்பகம்ஒன்றுக்கு... 0 - ச - 0
தபால்கூலி........... 0 - உ - 0

வெளியிலுள்ளவர்கள் புஸ்தகம் ஒவ்வொன்றுக்கும் குறித்த தபால்கூலி சேர்த்தனுப்பவேண்டியது.

---

## விளம்பரம்

### தெலுங்கு தத்துவபோதினி.

இஃது சென்றநவம்பர்முதல் பிரசுரஞ்செய்யப்பட்டு வருகின்றது. நவம்பர்முதல்மேமீ வரையில்அரைவருஷசந்தா. 0 - கஉ - 0
தபால்கூலி........... 0 - கூ - 0

---

## தத்வபோதினி.

**சோதரர்களே!** இன்று வேறொரு விஷயத்தைப்பற்றி சிலசர்ச்சை செய்யவேண்டியிருப்பதால் முன்பு தொட்டவிஷயத்தைசற்றுநிறுத்திவைக்கிறோம். அதாவது, தஞ்சை தர்மஸமாஜ காரியதரிசியென்று கையொப்ப மிட்டெழுதி யனுப்பிய நிருபங்களை யிப்பத்திரிகையில் காண்பீர்கள். அவர் வரைந்தனுப்பிய வினாக்களைகண்டு அவற்றின் ஸ்வரூபத்தை யோசித்து அவைகட்கு விடை கொடுப்பது அநாவசியக மென்று கடந்த நவம்பர்மாதசஞ்சிகையிலேயே குறிப்பிட்டிருந்தும், அதனுடன் அவர்திருப்தியடையாமல் மீண்டும் அவற்றிற்குவிடைதரும்படி இரண்டொருகடிதங்களெழுதி மன்றாடுகிறபடியால், அவற்றின் ஸ்வரூபம் யாவரும் அறியும்படி இதில் அச்சிட்டு, முக்கியமானசில வினாக்கட்கு மாத்திரம் எங்கட்குத் தெரிந்தவரையில் சமாதானமும் கூறுவோம். க - வது "ருக்வேதமாகிய நிருக்தம் - உ - வது அத்தியாயம் மூன்றாவது கண்டம் முதலியபலசுருதிவாக்கியங்களினால் வேதம், அல்லது பிரமவித்தை இதுகளில் பிராம்மணனுக்கேயதிகாரமுண்டென்று சொல்லியிருக்கையில் இதரவர்ணருக்கும் அதிகாரமுண்டென்பதற்கு எதாவது சுருதியில் ஆதாரமுண்டா?" என்றுஅவர் கேட்கிறார். சூத்திராதிகள் வேதாப்பியாசம் செய்வது சாதுவேயெனவேதம் ஆமோதித்திருக்கிறதென்றும், அஃதுயுக்திஸ்வானுபவங்களுக்கும்அடுத்தவிஷயமேயென்றும், எங்கள்உபந்நியாசத்தில்காட்டியிருக்கிறபடியால், அது பத்திரிகையில்பிரசுரப்படும்போது கண்டு, தாம் கேட்டதற்குசமாதானமாகக்கொண்டு தெளியவும், அதுவரையில் பொறுத்திருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறோம்.

உ - வது. "கூகூ - ம் - ௵ நவம்பர்மாதம் - கரு - தேதியிலுள்ள - தத்வபோதினிபுத்தகத்தின் முதலாவதுசைட், ச - வதுவரியில் 'ஸத்யெவஜயதெநாந்ருதம்' என்றுசெய்திருக்கிறபிரதிக்கியாவாக்கியத்தில் 'ஜயதே' யென்கிறசப்தம் பிரயோகிக்கக்கூடாது. ஏனெனில் "நம்லெச்சிதவை" என்று வியாகரணமஹாபாஷ்யத்தில் முறையிடப்பட்டிருக்கிறது. அப்படியிரு

“ க்க ‘ஜயதே, என்கிற அபசப்தத்தை ஏ
“ ன்பிரயோகிக்கவேணும். எவ்வாறெனி
“ ல்·ஜீ'யாதுவரமெஹவத°, ஆத்மநே
“ வதமல்ல, அதற்கு ‘ஜயதி’ என்றுரூ
“ பமாகுமேதவிற ‘ஜயதெ, ஒருக்காலும்
“ ஒருவியாகரணரீதியாகவும் ரூபம்கிடை
“ யாது. ஜீயாதுவுக்கு ‘ஜயதே’ என்றுரூ
“ பத்தை ஸ்தாபிப்பவர்களுக்கு இந்தப்
“ பிரம்மகல்பத்தைக் கெடுவாக ஏற்படு
“ த்திக் கொடுக்கலாம்”. இதுவனையில் வைதிகமதத்தில் சேர்ந்த ஒருவரோனும் வேதவாக்கிய லக்ஷணத்தை யாக்ஷேபிக்கக்கண்டோமில்லை. இப்போதிவர் ஆக்ஷேபித்தது புதுமையாயினும் அதற்கு விடை தருவது கடினமன்று. “ஸத்தியமேவஜயதெ” என்னும்வாக்கியம்வேதவாக்கியமென்பதுயாவர்க்கும் தெரிந்தவிஷயமே. இஃது முண்டகோபநிஷத்து - பிரதமமுண்டகம், இரண்டாம் அத்தியாயத்தைச்சார்ந்தது. அதில் “ஜயதி” என்றுசித்தரூபமாகவேண்டிய வினைச்சொல்லுக்கு“ஜயதெ”யென்றுரூபமேற்பட்டதற்கு விதியென்னவென்று பார்க்கையில் “தாநி யஜூம்ஷி வ்யய ஶாந்த்யாஸந்து” “ஸவஹாணா வீரஶாதநஃ” “ஸஹஸ்ரம் ஶீர்ஷாணி” இவை முதலிய வாக்கியங்களிலுள்ள வியாகரணப்பிழைகளுக்கென்ன விதியோ அதேவிதியாயிருக்கிறதேயன்றி வேறு விதமாயிருக்குமென்று தோற்றவில்லை. அப்படியிருக்க இதையும் ஒருஆக்ஷேபமாகக்கேட்டு எங்களை விடையெழுதும்படிசெய்வது யுக்தமோ என்பதை யவரோ யறிந்துகொள்ளலாம். மற்றவி●க்களைப்பற்றி வருகிறதடவை யோசிப்போம்.

---

இந்தவிசைபொங்கலுக்காக ஆபீசுவேலைக்காரருக்கு ரு - சு - நாள் செலவுகொடுக்கப்பட்டமையால். பத்திரிகை காலத்தில் பிரசுரமாகக்கூடாமல் போயிற்று. அதுபற்றி மன்னிக்கக்கோருகிறோம்.

---

## வேளாண்மை.

பிரோமயின் அல்லது இலவணத்திப்பி. இது இலவணமூலத்தைப்பார்க்கிலும்அருமையானபூதம். கடல்ஜலத்தில் விசேஷமாககலந்திருக்கும். கடல்நீரிலிருக்கும் உப்பை எடுத்துவிட்டால் அதில் சேஷமாகநிற்கிற பதார்த்தந்தான் இலவணத்திப்பி இது சுத்தமாயிருந்தால் சிவப்பான அதிக பளபளப்புள்ள எண்ணைபோலிருக்கும்; இதின்கந்தம் இலவணமூலத்தினது கந்தத்தைப்பார்க்கிலுங் கொடியது. இதனுடைய ஆவி சிவந்திருக்கும். ஜலத்தோடு சற்றேகலக்கும். இது ஜீவமூலத்தோடு கலந்து காரத்திரவமென்கிற ஒருஅருமையான பதார்த்தம் உண்டாகிறது. பிராணிகளுடைய எலும்புகள் இந்திரியத்தினாலும் சுண்ணும்பினாலும் ஆகின்றன. நமது எலும்பு தசை நரம்புமுதலியவும் நாம் உண்ணுகிற ஆகாரத்தினால் குழந்தைபருவத்திலிருந்து வளருவதால் நாம்உண்கிற ஆகாரத்தில் மேற்படிபதார்த்தம் விசேஷமாக கலந்திருக்கவேண்டும். ஆதலால் நாம் உண்ணுகிற பாலிலும் பலவித தானியங்களிலும் கிழங்குகளிலும் மாம்ஸாதிகளிலும் இந்தத்திரவம் விசேஷமாக கலந்திருக்கின்றது. இது இல்லாமற்போனால் கந்தமூலங்கள்முளைக்கவேமுளையாது. நிலமானது பாழடைந்து ஒன்றையுமுண்டாக்காது. ஆகையால்தான் நறுக்கப்பட்ட எலும்புகளும் சுடப்பட்ட எலும்புகளும் மிகவும்பிரயோஜனகரமான எருவாகின்றன.

கிளோரயின், பிரோமயின், ஐயோடயின் பிளோரயின், என்னும் இந்த நானகுபூதங்களும் ஒன்றுக்கொன்று மெத்தசம்மந்தப்பட்டனவாகத்தோற்றுகின்றன. இவைகளில் முதற்சொல்லப்பட்டது சாராயத்தோடு பூரணமாககலந்துபோய்விடும்.

**ஐயோடயின்.** இதுகெட்டியானபளபளப்புள்ளபூதம். இதன் ஆவி இந்திரநீலவர்ணமுடையது; இதன்கந்தம் மேற்சொன்னவைகளைப்போன்றதானாலும் அவ்வளவுகொடியதல்ல. இது சமுத்திரஜலத்திலும் சமுத்திர ஓரங்களிலும்முளைத்ருதிக்கும் சாதாளை முதலிய பூண்டுகளிலிருந்து எடுக்கப்படுகின்றது.

**பிளோரயின்** இது தனியாயிருப்பதில்லை. பவுல்ஸ்பார் என்னும் ஒருவிதகல்லிலிருந்து எடுக்கப்படுகின்றது இதன்பொடியை கந்தகத்திரவத்தோடுகலந்தால் ஜலமூலத்திரவமென்கிற ஒரு அருமையான பொருள் உண்டாகின்றது. இந்த ஜலமூலத்திராவகத்தை கண்ணாடியில்விட்டால் அது கண்ணாடியைக்கரைத்துவிடும்.

**ஸ்படிகமூலம்.** இந்தப்பிரயோசனமுள்ளபூதமானது பிராணவாயுவோடுகலந்து பரிசுத்தமான பளிங்குக்கல்லாகிறது. இந்தபரிசுத்தமான பளிங்குகல்லுதான் ஸ்படிகமூலசத்து(அல்லது சிலிக்ஆசிட்)என்றுசொல்லப்படுவ்து. இதுஸ்படிகக்கல்நெருப்புக்கல் பருக்காங்கல் பாறுங்கல் களிமண்முதலிய பலபொருளுக்கு ஆதாரமாயிருக்கின்றது.

### லோககாரிக பூதங்கள்.

**காரமூலம்.** இது மரச்சாம்பலென்னப்பட்டவஸ்துவிலிருந்து எடுக்கபடும் லோகம். இது வெள்ளியைப்போல் வெளுத்து கெட்டியாயும்கொஞ்சநீலவர்ணமாயுமிருக்கும். இதுகாற்றுபட்டால் உடனே ஜீவமூலத்துடன் கலந்துகாரம் அல்லது மரவுப்பைஉண்டாக்கும். இதைஜலத்தின்மீதுவிட்டால் தீபற்றிஎரியும். இலவணகாரம் இதுபொட்டால்லியத்தைப்போல் ஒருவிதலோகம் இந்தலோகம்கல்லுப்பைப்போலிருக்கும். இதைஜலத்தோடு சேர்த்தாலும் அல்லதுஜீவமூலத்தில் சுட்டாலும்சோடா என்கிற ஒருவிதகாரத்தையுண்டாக்கும். **சுண்ணமூலம்** இதுசுண்ணாம்புக்கு ஆதாரமான பூதம். இதுவும் சுத்தகரிதிரவமுஞ்சேர்ந்துதான் பலவிதசுண்ணாம்புக்காற்கள்உண்டாகின்றன. இதுசுத்தமாயிருக்கும்பொழுது பொன்னைப்போல் பசுமையாயும் கெட்டியாயும் ஜலத்தைப்பார்க்கிலும் அதிகபளுவாயும் யிருக்கும். இதுகாற்றுள்ளவிடத்தில் சுடப்பட்டால் பிரகாசத்தோடெரிந்து சுடுசுண்ணாம்பு ஆய்விடும். சுண்ணாம்பும்இலவணமூலமுஞ்சேர்ந்துவஸ்திரங்களைச்சுத்திசெய்ய உதவுமொருவிதசவுட்டுமண் ஆகின்றது.

**காந்தக்கல்,** இதிலிருந்து மெக்னிஷியாஎன்னுங்காந்த பஸ்மம்செய்யப்படும். காந்தத்தை ஜீவமூலத்தில் தகித்தால் காந்தபஸ்பமாகும். இது மிருதுவான பசையுள்ள ருசியற்ற சற்றுவெளுமையான ஒருவிதபொடி மருந்துக்குமெத்தஉபயோகமானது.

**படிகாரமூலம்** இது ஒருவிதகளிமண் சுத்திசெய்யப்பட்டால் நேத்தியான வெளுத்தபிரகாசமுள்ள பொடியாயிருக்கும். இது படிகாரமென்னும் லோகத்துக்கு ஆதாரமாயிருக்கின்றது.ஜீவமூலமும் படிகாரமூலமுமுஞ் சேர்ந்துதான் படிகாரமென்னும் லோகமுண்டாகும். படிகாரத்தைசுட்டால் அதிலிருக்கும்ஜீவமூலம்நீங்கி படிகாரமூலமாய்விடும்.

**அயம்** இதுபஞ்சலோகங்களில் ஒன்று. இது மனிதர்க்குமிகவும் பிரயோஜனமுள்ளதாயும் உலகத்தில் எங்கும்நிறைந்ததாயும் இருக்கின்றது. இரும்பு சன்னம்கலந்திராதமண் காண்பதரிது. இது ஜீவமூலத்தில் உருகி பிரகாசமாகஎரிந்துஅயபஸ்மம்உண்டாக்கும். மேலும் இரும்பானது கரிமூலத்தோடுசேர்ந்து எஃகுஎன்னும் பதார்த்தமாகும். பலவிததிரவங்களோடுசேர்ந்து பலவிதஉப்புகளாகும்.

**காந்தப்போலி** இது சுத்தமாயிருந்தால் எஃகைபோலவெளுத்திருக்கும். இது காற்றிலிருக்கும் ஜீவமூலத்தை நிதானமாக க்ரஹித்துக்கொள்ளும். இதனிடத்தில் ஜலத்தைப்பிரிக்கும் தன்மையுண்டு. இது கண்ணாடிசெய்வோருக்கு மெத்தஉபயோகமுள்ளது. இதைக்கொண்டுதான் கண்ணாடிகளுக்கு ஒருவிதநீலவர்ணமுண்டாக்குவார்கள். இது ஜீவமூலத்தோடுசேர்ந்து பலவித பஸ்மமாகும்.

இவ்வாறு லோகசூன்னியமான, கக-பூதங்களும் லோககாரிகளான -எ-பூதங்களும் சத்திரமேகந்த மூலாதிகள்பயிர்ஆவதற்குக் காரணமாயிருக்கின்றன. இவைகள் பயிர்களுக்கு பயன்படும்விதத்தை வருந்தொடர்ச்சியில் கூறுவோம்.

---

## மநுநூல்.

### மூன்றாம் அத்தியாயம்.

(சக.) மற்ற நிந்திக்கத்தக்க (நான்கு) விவாகத்திலும் ஜனிக்கும் குமாரர்கள்பாபிஷ்டரும், பொய்சொல்பவரும், பிரம்மத்துக்கும் தர்மத்துக்கும் த்வேஷிகளாகவும் இருப்பார்கள்.

(சஉ.) மனிதருக்குள்ள மற்றவிவாகத்தில் ஜனிக்கும் பிரஜையானது புகழத்தக்கதாயும் குற்றமுள்ள விவாகத்தில் ஜனிக்கும் பிரஜையானது நிந்திக்கத்தக்கதாயும் ஆகும்; ஆகையால் (மனிதர்கள்) குற்றமுள்ள (விவாகத்தை) முற்றும் பரித்தியஜிக்கக்கடவார்கள்.

(சங.) சுவஜாதிஸ்திரீயைபாணிக்கிரஹணபூர்வகமாய் விவாகம்செய்து கொள்ளக்கடவதென உரைக்கப்படுகின்றது; சுவஜாதியல்லாத ஸ்திரீயை விவாகம்செய்துகொள்ளும்பக்ஷத்தில்கீழ்சொல்லப்படும் விதிகள் அறியத்தக்கவைகளாகின்றன.

(சச.) (பிராம்மணனே) க்ஷத்திரியஸ்திரீ விவாகம் செய்துகொள்ளுங்கால் அம்பை பிடித்துக்கொள்ளுதலும் (க்ஷத்திரியனே) வைசியஸ்திரீவிவாகம் செய்துக்கொள்ளுங்கால் கொரடாவின் நுனியையும் (வைசியனே) சூத்திரஸ்திரீ விவாகம் செய்துகொள்ளுங்கால் வஸ்திரத்தின் நுனியைப்பிடித்துக்கொள்ளத்தக்கதெனவும் உரைக்கப்படுகின்றது.

(சரு.) (கணவனானவன்) ருதுகாலத்தில் † சேருகின்றவனும் எப்பொழுதும் தன்மனைவியுடனேசேருகின்றவனுமாக இருக்கவேண்டும் ; அவளுடன்பர்வகாலத்தில்சேரத்தக்கவனல்லன். மேல்கண்டவிதி வித்தியாசமூாகியகாலத்தில், இல்லறசம்பந்தமானஸம்பாஷணம்செய்ய (சேரக்கடவான்.)

(சசு.) ஸ்வாபாவிகமாய்சான்ருேர்களால் நிந்திக்கத்தக்கதாகிய (ச) இரவுட்கல்களோடு(கசு)இராப்பகல்கள் ஸ்திரிகளுக்குருதுகாலமெனக்கூரப்படுகின்றது.

(கஎ.) மேற்கூறிய (கசு) தினங்களில் நிந்திக்கத்தக்கதாகியமுதல்(ச)தினங்களும் (கக.) (கஉ.) தினங்களும்தவிற மைற்ற (க0.) தினங்களும் பிரசஸ்தமென உரைக்கப்படுகின்றது.

(சஅ.) (ருதுவாகியதினம் முதல் பிரசஸ்தமாகிய மேலுரைத்த) இரட்டை (க்கணக்காகிய) இரவுகளில் (புணர்ந்தால்) புத்திரர்களுண்டாகின்ருர்கள் ; ஆகையால் புத்திரன்வேண்டுமென்று இச்சையுடையோர் இரட்டையாகிய மேலுரைத்த-ச-(தினங்களில்) தங்கள்மனைவியினிடம்செல்லக்கடவார்கள்.

சக. புமானிடத்துசுக்லம்அதிகமானல் ஆண்பிரஜையென்றும், ஸ்திரீகளினதுஅதிகமானல் ஸ்திரீபிரஜையென்றும், அவ்விருவர்களின்விரியமும் சமமாயின் அலி அல்லது ஸ்திரீஅல்லதுபுருஷபிரஜையாகவாவது ஜனிக்குமென்றும் அல்பமாவதினலாவது, குறைவதினலாவது விபலமாகிவிடுமெனவும் உரைக்கப் படுகின்றது.

ரும. எந்தஆச்சிரமத்தில்வசித்தபோதிலும் நிந்திக்கத்தக்கதாகிய வேறுஎட்டுராத்திரிகள்தவிர மற்ற இரவுகளில் புணர்வானுயின் உண்மையான பிரம்மசாரியாகின்ருன்.

† ருதுகாலமென்பதற்கு கற்பாதானத்துக்ருத்தகுதியாகிய காலமென குல்லூகபட்டர் விரித்துரை செய்திருக்கிருர்.

## தைத்தரீயஉபநிஷத்து.

### சீக்ஷாவல்லி

### பத்தாம் - அநுவாகம்.

யான்(வெட்டத்தகுந்தஸம்ஸாரமாகிய)மரத்திற்கு (அந்தரியாமியாகியஆத்மாவாகி)நியாமகன்(ஆகின்றேன்;)—(என்னிட) கீர்த்தியானது மலையினுச்சிபோல் (உயரமாகின்றது)—(யான்)உயரமாயும்பரிசுத்தம்,அல்லது பிரகாசமாயுமிருக்கும் சூரியனைப்போல் பரிசுத்தமாகிய(ஆத்மதத்துவமா)கின்றேன். (சுககேதுவான)நல்லகாந்தியுள்ளதனம்(போல் மோக்ஷசுகஹேதுவாகஇருப்பதால் என்ருல் ஆத்மத்துவமடைவிப்பது.)—ஸம்ஸாரத்தின் உத்பத்தி இருப்புமுதலியவற்றை நடத்துவதால்)யான்சிறந்தபுத்தியுள்ளவனும்,மரணதர்மமற்றவனும்,நாசமற்றவனு(மாகின்றேன்.) இவ்வாறே (பிரம்மவித்தாகிய)திரிசங்குவின் ஆத்மைகபிராப்திகியானம்.

பத்தாம் அனுவாகம் முற்றிற்று.

## நிருபங்கள்.

### உபந்நியாஸம்.

அன்பர்களே ! கடந்தவாரத்தில் எங்கள்சமாஜத்தாருக்குரித்தான தர்மங்களைக்குறித்துமாத்திரம் பிரஸ்தாபித்தேனல்லவா ? இன்று மனுஷியசாமானியத்துக்கும் பொதுவானதர்மங்களைக்குறித்துச் சிலமொழிகளையுரைக்கிறேன். ஜனஸாமானியமானதென்பதினுலே இது எங்களசமாஜத்தாரை சம்பந்

"அஹம்வ்ருக்ஷஸ்ய"என்னும் மந்திரத்திற்கு ரிஷியானவர் திரிசங்கு-பங்கதி சந்தஸ்—பரமாத்மாதேவதை—திரிசங்கு என்னும் ரிஷியால் கண்டுபிடிக்கப்பட்ட இவ்வாத்மவித்தியாபிரகாசத்தின் ஜபமானது வித்தையின் உத்பத்தியின்பொருட்டு எனஉரைக்கப்படுகின்றது. என பாஷியத்திலுரைக்கப்படுகின்றது.

தித்தல்லவென்று நினைக்கக்கூடாது. மனுஷியசாமானியத்தில் நாங்மளும் ஏகதேசமாகையால், இவ்விஷயம் எங்களுக்கும் சமமாய் அனுவபிக்கவேண்டியதாகிலும், எங்கள் அந்தஸ்தின் சுவரூபத்தால் பிறரைக்காட்டிலும் எங்கள்விஷயத்திலே அதிகமாய்வினியோகிக்கும். பிறருக்குமாத்திரம் தர்மோபதேசம் செய்துகொண்டிருக்கையில் எங்கள் பிரவிருத்திதூஷ்யமாயிருக்குமாகில், எங்கள்பேச்சு மதிப்பற்றுப் போகுமென்பதற்கு, ஸாஹஸம்ரோகுரு(ஸாஹஸஞ்செய்யாதே) என்று சொல்லிக்கொண்டு சிம்மத்தின் பல்லிடுக்கிலுள்ள மாம்ஸத்தைக் குத்தித்தின்னும் குலிங்கசகுனியென்னும் பக்ஷியைக்குறித்து நம்மவர் சொல்லும் உபாக்கியானமே திருஷ்டாந்தமாகும். ஸாதாரணமாய் நலங்கூறுவோருடைய சரிதையெப்படியிருந்தபோதிலும், அவர்களுடைய ஹிதவாக்கியங்களை மாத்திரம் அவசியம் கிரகிக்கவேண்டியது அனைவர்க்குங் கடமையென தெளிந்தோர் கொள்வார்களாகிலும், உலகத்தில் பாமரர்களே விசேஷமாகையாலும், உபதேசிப்பவர் எந்தஹேதுவைப்பற்றியாவது கவுரிக்கத்தவராயிருந்தால், அவர்கள் சொல்லும்பேச்சுகளில் சுவரூபவிசாரம்செய்து தாரதம்மியமேற்படுத்திக் கொள்ளாமல்அவர்கள்சொல்வதெல்லாம் பிரமாணமென்றேநினைப்பது பாமரருடைய சுவபாவமாகையாலும், நாம் சகலவிதத்தாலும் அவர்களுடைய மதிப்பைப்பெற முயலவேண்டும். ஒருபெரியவர் பழுதானதொழிலைஏவினால் அதையும் சாதுவெனக் கொள்வோருண்டோவென்று மலைக்கவேண்டாம். பிராம்மணரில், முக்கியமாய் வைஷ்ணவரில், வக்திருவைலக்ஷணியத்தை விசேஷமாய்ப் பாராட்டுவரேயன்றி, விஷயவைலக்ஷணியத்தைப் பாராட்டமாட்டார்களென்பதற்கிரண்டு திருஷ்டாந்தங்களைக்கூறுகிறேன். ஒருதுட்டுநாமத்தைமாத்திரம் பெற்றிருந்தால், நம்மாழ்வாரும் தம்மாழ்வாரென்று கொண்டாடத்தக்கவராயிருந்த தாயுமானவசுவாமிகள்சாம்பலாண்டியாயிருந்ததினாலல்லவா, தேவர்களும் வேதமென்றுசுமந்து, அமிருதமென்று பருகத்தக்க திவியரஸதமமான அவருடையபாட்டுக்களைச்செவிகொடுத்துக்கேட்க ஒப்பாதவைஷ்ணவர்கள், பொருள்சிறப்புமில்லாத சில்லரையாழ்வார் பாடல்களெல்லாம் சிரஸாவஹித்துப் பரமார்த்தமாய் கிரஹித்து நடப்பது எல்லோருக்குந் தெரிந்தவிஷயம். இதுவன்றி ஒருஆசாரியன் தன்னுடைய பிரியசிஷியனைநோக்கிக் கொலை கோள் சத்தியம் முதலிய துஷ்டகாரியங்களைச் செய்யும்படியேவினாலும், அந்தசிஷியர்களதை முடிப்பது லோகப்பிரசித்தம். குமார்க்கங்களை யனுசரித்துப் பிறருடைய கவுரவ மதிப்பைத்தேடுவது தூஷியமாகிலும், சன்மதப்பிரவசனத்தின்பொருட்டு,சன்மார்க்காவலம்பனத்தால் கவுரவத்தைத் தேடுவது அனைவரும் ஒப்பியகாரியமே. மனுஷியருக்செல்லாம் பொதுப்பட்ட தர்மங்களனைத்தையு மிங்குத்தனித்தனியா யுபனியவிப்பதற்கு ஆவசியகமுமில்லை அவகாசமுமில்லையாகையால் தர்மங்களிலெல்லாம் தலைமையானவற்றைக் குறித்துமாத்திரம் பிரஸ்தாபிக்கநிச்சயித்துக்கொண்டேன். காருணியம், நியாயம், சத்தியம், மிதாசாரம், பாதிவிருத்தியம், ஆகிய இந்தஐந்தையும் சோர்வின்றி காப்போமாகில் நாம் தர்மமார்கத்தினின்றும் நழுவுவது வெகுஅருமையாகும்.

சர்வதர்மங்களுக்கும் சிரோபூஷணமானது காருணியமாகும். இதுகடவுளுக்கே ஒப்பற்ற ஆபாணமாய்விளங்குகின்றது. இதைப்பலவாறுய்வர்ணிக்குங்கால் வேதாந்தாசாரியர்“வ்ருஷகிரிக்ருஹமேதிநோகுணா:போதபலைச்வர்யவீர்யசக்திமுகா: தோஷாபவேயுரேதே யதிநாமதயே த்வயாவிநாக்ருதா:” (தர்மபர்வதமாகிய கடவுளை யலங்கரிக்கும் ஞானம், பலம், ஐசுவரியம், வீரியம், சக்தி முதலிய குணங்களெல்லாம் கருணையோடு பொருந்தாவிடில் தோஷமாயல்லவாமுடியும்.)என்றுசிறப்பித்துக் கூறியிருக்கின்றனர். “அன்பிலதனை வெயிற்போலகாயுமே யென்பிலதனையறம்”(உடலில் எலும்பைப்பெருதபுழு, பூச்சி முதலியவை வெயிலில்தபிப்பதுபோலவே, அகத்தில் அன்பைப்பெருதவர், தமதுசரிதைக்குத்தரவாதம்செய்ய தர்மகடவுளெதிரேவரும்போது, நடுங்கியொடுங்கி தபிப்பார்களென்றும்)“அன்பின்வழியதுயிர்நிலை அஃதிலார்க்கென்புதோல் போர்த்தவுடம்பு”அன்பை யகத்தில் பெற்றிருப்பவர் எவரோ அவர்தேகமே உயிருள்ளதேகமெனப்பொருந்தும்; அந்தஅன்பைப்பெருதவர் சரீரமோவெனில் பார்வைக்கு மனுஷியதேஹம்போல் விளங்கினபோதிலும உண்மையில் அதுஉயிரற்ற பிணமேயாகும்)என்றும்; இன்னும்பற்பலவிதமாகவும்திருவள்ளுவனுயனார் அதைச்சிறப்பித்திருப்பதை நம்மவர்களனைவரும் அறிந்தேயிருக்கிறோம். ஷேக்ஸ்பியர் அதைவர்ணிக்குங்கால், “அது இருவழியிலும் இன்பமுடையது, கொடுப்பவர்க்கு மின்பந்தரும், சர்வசக்தனிடத்து அதற்கு சர்வசக்தியுண்டு, சிம்மாஸனம்பெற்ற அரசனுக்கு அதுகிரீடத்தினும் சிறந்தகலனு

கும். அவன்செங்கோலின் மேன்மைக்கும், காம்பீரியத்துக்கும் சின்ஹமாகி ஐஹிக வன்மையின் கொடுமையைவிளக்கும். அகிலராசர்பீதியெல்லாம்வீற்றிருச்கின்றது. கருணையோவெனில் செங்கோலின் ஆட்சிக்குஞ்சிறந்தது. அரசர்ஹிருதயங்களையேஅநுசிம்மாசனமாய்ப்பெற்று வீற்றிருக்கின்றது. அது கடவுளுக்கே ஆபரணமாகும். கருணையினால் மணம்பெற்றால் மாத்திரமே லவுகிகஅதிகாரம் கடவுளினதற்கு அதிசாமீப்பியத்தைய யடையும்" என்றுகூறியிருக்கின்றனர். எந்த மதக்கிரந்தத்தை யெடுத்தாலும், இந்தகுணவரசின்மேன்மை தானாய் விளங்குமாதலால் அதின்சுவரூபத்தைக்குறித்து விசேஷமாய்க்கூறுவது அனுவசியகமாகும். ஆகிலும் அதின் பிரவிருத்திக்கு சமயங்களின்னவையென்று அறிந்துகொண்டு, அதற்கிடையில் வரும்தடைகளெல்லாம் தடுக்கமுயலவேண்டியதுஒவ்வொருவருக்கும் நீங்கலாக்கடமையாகும். கருணைக்கிடங்கொடுப்பதில் மற்ற தர்மங்களுக்கு ஹானிநேரிடாது காக்கவேண்டும். ஒருவன் குற்றம்செய்வதைக்கண்டிருந்த மற்றொருவன் கருணைக்குப் பரவசமாகி அதைவலியவெளியிட்டு கோஷிக்காமலிருந்துவிடுவது தோஷமாகாவிடினும், அதைக்குறித்து அயலார்கேட்கும்போது அவனதை யறியேனென்றுவது அறிந்ததை வேறுவிதமாயாவது உரைத்தால் தோஷமேயாம். உண்மை யுரைத்தல் அனைவர்க்குங் கடமை. அன்றியும் உண்மையைத்தவிருது அனுஷ்டிக்க மனிதனால்முடியும்; கருணையையோவெனில் ஸபலமாயும், பூர்ணமாயும் அனுஷ்டிக்கக் கடவுளொருவராலே முடியும். நமக்குச்சத்தியமும், நியாயமும், சுவரூபசின்னங்களாயுள்ள வரையில், அவற்றிற்குப் பாதகம்வரும்வழியாகக்கருணையைஅனுஷ்டிப்பதுபழுதேயாகும்.பசியால்வருந்துமொருவனிடத்தில் கருணைகூர்ந்து, மற்றொருவன் சோற்றைத்திருடி யவனுக்குக்கொடுப்பதை யாரேனும்தயையென்றுசிலாகிப்பார்களோ. பசு பிராம்மணாதிகள்விஷயத்தில் அவர்கள் லாபத்தின்பொருட்டுப் பொய்சொல்வதிலும் பழுதில்லையென்று உபதேசிப்பவரும், அவற்றைச்சீரான உபதேசமென்று நம்பியனுஷ்டிப்போரும், நம்மதேசத்தில் பலருண்டென்பது உண்மையே. ஆகிலும் அதற்கு ஹேதுவிசாரிக்கப் புகுங்கால்திருப்திகரமான சமாதானம் விளங்கமாட்டாது. அரசர்களிடத்தில் குத்தகையாய் மந்திரித்தனத்தைப் பெற்றிருந்த பிராம்மணர் சுவப்பிரயோஜனத்தைக் கருதி யிவ்வாறு உரைத்திருந்தபோதிலும், காரியகாரண விசாரம் செய்யும் ஒருவரும் அதை கவுரவிக்கமாட்டார்களென்று குறிப்பிடுவ தனுவசியகமாகும். யுக்தியாவது ஸத்பிரமாணமாவது இல்லாதவரையில், பொது நீதிக்கு விரோதமான காரியங்களை யனுஷ்டிப்பது அனுசிதம், அசாஸ்திரீயம், அனுவசியகம். ஆகிலும் இதற்கும் வேதத்தில் பிரமாணமிருக்கிறதென்றுரைக்கப் பிராம்மணர்களஞ்சமாட்டார்கள். "யஸ்வ்ராஹ்மணஸ்யா வ்ராஹ்மணஸ்ய

வ்ருஷேயோதாம வ்ராஹ்மணாயாயிவ்ருஷ்யாஷ்"

என்கிறவேதவாக்கியத்துக்கு (பிராம்மணனுக்கும்மற்றவர்ணத்தாருக்கும்விவாதம்வரும்போது பிராம்மணன்பக்ஷமாய்சாக்ஷிசொல்) என்பது பொருளென்று சாதாரணமானவர்கள்கூறுவதும் அதைபபாமரர்கள் நம்புவதும் லோகப்பிரசித்தம். இவ்விதமான லோகோத்தரமான உபதேசத்தை வேதம்செய்யும்பக்ஷத்தில் அதை நொடிப்பொழுதாவது கவுரவிக்கக்கூடுமோ. உலகத்தில் எத்தேசத்தில் வழங்குகிற நியாயசாஸ்திரத்தை யெடுத்தாலும், பிரத்தியக்ஷப் பிரமாணம் சர்வசிரேஷ்டமானதென்றும், அனுமானம் அதற்கிரண்டாவதென்றும், சப்தம்கடைசியாகுமென்றும், ஏற்படும். இதரப்பிரமாணங்களின் உதவியன்றி நமது சுவந்தக்காக்ஷியின் வழித்தாக நாம் ஒருஞானத்தை யடையும்பக்ஷத்தில் அந்தக்காக்ஷிக்குப் பிரத்தியக்ஷப் பிரமாணமென்றுபெயர். ஆகையால் இதுசர்வசிரேஷ்டமான தென்பதை நிரூபித்துக்காட்டவேண்டியதில்லை. ஒருகாரியத்தைநாம் நேராய் அறிந்திராவிடினும், சிலகாரணங்களி னிருப்பால் அந்தகாரியத்தைஊஹித்துக்கொள்வதற்கு அனுமானப் பிரமாணமென்றுபெயர். ஒருகாரணத்தால் பலகாரியங்களும், பலகாரணங்களால் ஒருகாரியமும், உண்டாகலாமாகையாலும், பலவிசை யில்லாவிடினும் சிலவிசையாவது கேவலம்அனுமானப்பிரமாணத்தால் பிசகிப்போவதுசாத்தியமென்பதை நிரூபித்துக்காட்டப் பிரகிருதத்தில் அவகாசமில்லைபாகிலும்,இந்தஹேதுவைப்பற்றியே இதைப்பிரததியக்ஷப் பிரமாணங்களுக்கு, இரண்டாவதென்றும், பிரத்தியக்ஷப்பிரமாணம் கிடையாதபோதும், அதைப் பரிசோதிக்கவேண்டியபோதும், அனுமாநப்பிரமாணம் வேண்டியதென்கிற வியவஸ்தை யேற்பட்டிருப்பதாய்மாத்திரம்எச்சரிக்க வேண்டியிருக்கிறது. சப்தப்பிரமாணமோவெனில் பிரத்தியக்ஷ, அனுமானப்பிரமாணங்கள் கிடைக்காதபோதும், அவற்றால் பாதிக்கப்படாதபோதும் மாத்திரம்கிராஹியமாகவேண்டிய அதமப்பிரமாணமெ

ன்பதற்கு நம்முடைய தேசத்தில் மாத்திரமேயன்றி அனியநாடுகளிலுமுள்ள மதக்கிரந்தங்களில் பெரும்பான்மையுந் திருஷ்டாந்தமாகும். வேதமானது சப்தப்பிரமாணங்களுக்குள் சர்வசிரேஷ்டமானதாகினும், பிரத்தியக்ஷ, அநுமானங்களுக்கு விரோதமாகில் அதை ஒருபிரமாணமாகவே மதிக்கவேண்டியதில்லையல்லவா. உலகத்தில் எவ்வகைமனிதரும் பொய்யுரைத்தால் கவுரவமொழிந்து போவதை யனைவரும் பிரத்தியக்ஷமாயறிந்திருக்கிறோம். மதப்பற்றற்று உண்மைக்கே பரவசமாகிய நீதிசாஸ்திரக்கியர்கள் தீரப்பரிசோதித்து, பொய்சொல்வதினால் வக்தாவுக்கும், அயலாருக்கும் உடனேயும் பின்னிட்டும் நேரிடத்தக்க நன்மைதின்மைகளைச் சீர்தூக்கி, எப்போதும் எந்தஹேதுவைப்பற்றியும் ஒருவன் பொய்யுரைக்கக்கூடாதென்று ஐயமற நிரூபித்திருப்பதை பார்த்திருக்கிறோம். அன்றியும் இதேவேதத்தில் "ஸத்ய ஜெயதெநாந்ருதம்" (மெய்யேவெல்லும் பொய்யல்ல)வென்று கூறியிருப்பதையும் படித்திருக்கிறோம். இதுகளுக்கெல்லாம் நேர்விரோதமாக பிராம்மணனுக் கனுகூலமான பொய்யைச்சொல்வது சாதுவென்று வேதமுரைக்குமாகில், அதை கவுரவிக்கப்புகுங்கால் வியவஸ்தைகெட்டு கரைபுரண்டு போகுமெனபதில் சந்தேகமில்லை. நம்முடைய வேதங்களுக்குட் பட்டவர்களும், கேவலம் பிரபஞ்சவேதிகளான நிரீசுவர வாதிகளும் ஒத்துக்கொண்டிருப்பதற்கு நேரவிரோதமான உபதேசம் நம்முடையவேதத்திலிருக்கிறதென்பதே அநுமானத்துக் கிசையமாட்டாது. ஆகிலும் யஸ்ப்ராஹ்மணஸ்ய ப்ராஹ்மண ஸ்யப்ரஜெயாதாம் ப்ராஹ்மணாயாயிப்ரூயா ஈஎன்பதை வேதவாக்கியமல்லவென்று நானுரைக்கவில்லை. அதின் உத்தேசியமும்தாத்பரியமும் வேறுகுமென்பது மாத்திரமே என்கொள்கை. இதன்கருத் தென்னவெனில் ஒருவியவஹாரத்தில் ஒருவன்பக்ஷத்தில்ஒருபிராம்மணனும்,மற்றொருவன்பக்ஷத்தில்இதரவர்ணங்களிலொருவனும் சாக்ஷிகளாய்வந்து ஒருவர்க்கொருவர்நேர்விரோதமாய் சாக்ஷிசொல்லும்பக்ஷத்தில் உண்மையை அறிந்துகொள்ள மார்க்காந்தர மில்லாவிடில் நியாயாதிபதி பிராம்மணனுடைய சாக்ஷியத்தை நம்பவேண்டியது என்பதே இந்த வாக்கியத்தின் உண்மையான கருத்தாகும். இது கேவலம் எங்கள் கருத்தென்று நினைக்கவேண்டாம். அந்தவாக்கியம் வரும் சந்தர்பத்தையும், அதற்கு வேறுவிதப்பொருள் கூறும்பக்ஷத்தில் விளையதக்க பாதகங்களையும் யோசிப்பவருக்கு இதுவேசரியான பொருளென்று விளங்குமென்பதில் சந்தேகமில்லை. உண்மையான பிராம்மணனும் பிராம்மணனுக் குரிய சன்மார்க்கங்களிலே நிலைத்து வேதவேதாந்தங்களையே பற்றிக்கொண்டிருப்பவர். பொய், கோள், அசத்தியம்; முதலிய சகலவிதபாவங்களுக்கும்அஞ்சவேண்டியவனுகையால் அவன் பிரபலவிஷயங்களிலேயே பொய்சொல்லமாட்டானுகையால், சாதாரணவிஷயங்களில் பொய்சொல்லுவானுவென்கிற அநுமானம் சாதுவானதேயாகும். ஆகையால் இவ்விதப்பொருளை யடக்கியிருப்பதில் வேதத்துக்கும் லாகவமில்லை. வேதததின் பிரசித்தமான பொருளைமறைத்து, பழுதானபொருளைக் கூறயாரெனும் துணிவார்களாவென்று சங்கிக்கவேண்டாம். கும்பகோணத்திலுள்ள பண்டிதர்களில் முப்பதுபேர்க்கு க்குறையாமல் கூடிபெழுதியவேதஸமாஜகண்டனமென்னும் சஞ்சிகையில் உதஹரித்த சுருதிவாக்கியங்களிற் சிறிதை யிவ்விடத்திலெடுத்துக்காட்டுவதே போதும். "யூபவாஸா ஸுவாஸாஃ பரிவீதஆகாத் ஸஉஶ்ரேயாந்பவதி ஜாயமாநஃ தம்தீராஸஃ கவயஉந்நயந்தி ஸ்வாத்யொ மநஸா தெவயந்தஃ" என்கிறசுருதிக்கு (நல்லவஸ்திரத்தால் அலங்கரிக்கப்பட்ட யூபஸ்தம்பம்வந்தது அது பிறந்தமாத்திரத்தில் சிரேஷ்டமாகிறது. அதை தேவதாபிரீதியுள்ள தீரராயும் நல்லமனமுடையவராயுமுள்ள கவிகள் புத்திவிசேஷத்தால் அதைநாடுகிறார்கள்) என்கிறகருத்தேசரியானதென்று "யுவா = த்ரு "ணாம்ஶஃ சஷ்ட்ராஸ்யாதிரக்ஷண ஶக்தியி "த்யர்த்ஃ, ஸுவாஸாஃ = ஶோபநெந "வாஸஸா = ரஸநயா ஸ்வஸஃ. பரிவீதஃ = "தயாரஸநயாவெஷ்டிதஃ, ணவம்வியொ யூ "பஆகாத் = ஆகமத். ஸஉ = ஸணவ = "யூபஃ, ஶ்ரேயாந் ஜாயமாநஃ = ஸவொ "த்ருஷ்டவநஸ்பதிப்யஃ உத்க்ருஷ்டதயாஸம்ப "த்யமாநொ பவதி, தம் = ணவம்யூபம், தீ "ராஸஃ = ப்ரஜ்ஞாவந்தோ தெவயந்தஃ = தெ "வாநுகாமயமாநாஃ, ஸ்வாத்யஃ = ஸுஷ்டு = "ஸவர்தொத்யாநயுக்தாஃ, கவயஃ = க்ராந "தர்ஶிநொ யஜமாநயஃ, உந்நயந்தி = உ "ந்நதம்குர்வந்தி" என்கிறபாஷியத்தால் ஸ்பஷ்டமாயேற்படுகையில், யாகத்தில்கொல்ல

ப்படும் பசுமுதலியவற்றைக் கட்டப்படும்யூபஸ்தம்பமான இந்தவேதவாக்கியத்தில், விக்கிரஹஆராதனை சாதுவென்று சொல்லியிருப்பதாய் உரைத்து உலகத்தை யேமாற்றத்தலைப்பட்டது லோகப்பிரசித்தம். இம்மாத்திரியாகவே விராட்டென்றால் பிரபஞ்சம்அல்லது சதுர்முகப் பிரும்மாவிஷயமாய்ச் சொல்லப்பட்ட "ப்ரஹ்மணோஸ்ய ஸ்வரூபாவஸீக்ஷ"என்கிறசுருதியினால் ஒன்றான அதிருசிய பரப்பிரும்மத்துக்குக் கரசரணாதி யவயவங்களிருப்பதா யேற்படுகிறதென்றும், நம்முடைய ஹிருதயத்திலுள்ள பிராணாக்னி சிகையை வர்ணிக்கிற "நீலதோயதமத்யஸ்தா வித்யுல்லேகேவபாஸ்வரா"என்கிறவாக்கியத்தினால் பரபிரும்மத்துக்கு வர்ணமிருப்பதாய் ஏற்படுகிறதென்றும் இன்னுமிவ்வாறுகப் பலசுருதிகளுக்கு லோகோத்தரமான பொருளுரைத்திருக்கிறார்களல்லவா. இதினாலெல்லாம் நம்மவர் சமயத்துக்கியைந்தபடி பொருள்கூறப் பின்னிடையமாட்டார்களென்றும், "யஜ்ஞேன யஜ்ஞமயஜந்த தேவா"என்கிறசுருதிக்கு அவர்களுரைக்கும் பொருள் சரியல்லவென்றும், சர்வதர்மங்களும் நமக்கு அனுஷ்டேயமேயன்றி ஒன்றை யனுஷ்டிக்கும்நிமித்தம் மற்றொன்றைக் கைவிடக்கூடாதென்றும், ஸ்பஷ்டமாயேற்படும். கருணையொன்றை யனுஷ்டிப்பதைக்குறித்துகூட இன்றுசேஷமின்றி பிரஸ்தாபித்து முடியாதாகையால், இன்றிவ்வளவுடன் நிறுத்திமீதியை மற்றொருதினத்தில் உபிணியசிக்கநிச்சயித்தேன்.

---

## தஞ்சைநகர்தர்மசபை.

### விஜயதைஸத்ருதிநக்ஷா.

மா - ா - சென்னை வேதசமாஜத்தாரவர்களுக்கு.

ஐயா.

வருகிறதத்துவபோதினியில் அடியில்எழுதியிருக்கிற சுருதியுக்தமான சிலவரிகளைப் பிரசுரம்செய்யக்கோருகிறேன்.

அதாவது ருக்குவேதமாகியகிருக்தம்உவது ஆத்தியாயம் ஙவதுகண்டம் முதலிய பலசுருதிவாக்கியங்களினால் வேதம் அல்லது பிரம்மவித்தை இதுகளில்பிராம்மணனுக்கே அதிகாரமுண்டென்று சொல்லியிருக்கையில் இதரவர்ணருளுக்கும் அதிகாரமுண்டென்பதற்கு ஏதாவது சுருதியில் தகுந்த ஆதாரமுண்டா?

உ - வது௬௬(ஞ) நவம்பர்மீ கருவையுள்ள தத்துவபோதினிபுஸ்தகத்தின் முதலாவதுசைட் அ - வதுவரியில் சத்தியமேவஜயதேநாந்ருதம்என்று செய்திருக்கிற பிரதிஜ்ஞாவாக்கியத்தில் "ஜயதே"என்கிறசப்தம் பிரயோகிக்கக்கூடாது. ஏனெனில் "நஜேர்விதவெ"என்று வியாகரணமஹாபாஷ்யத்தில் முறையிடப்பட்டிருக்கிறது. அப்படியிருக்க (ஜயதே)என்கிற அபசப்தத்தைஏன் பிரயோகிக்கவேணும்.எவ்வாறெனில்"ஜீ"யாதுவுக்கு ஸைலவைதம்சூத்ரெநவைதம்அல்ல"அதற்கு (ஜயதி)என்று ரூபமாகுமேதவிற (ஜயதே)என்று ஒருக்காலும் ஒருவியாகரணரீதியாகவும்ரூபம் கிடைக்கமாட்டாது(ஷி)யாதுவுக்கு "ஜயதே"என்றுரூபத்தை ஸ்தாபிப்பவர்களுக்கு இந்தப்பிரம்மகல்பத்தை கெடுவாக ஏற்படுத்திக்கொடுக்கலாம்.

இப்படிக்கு
குமார - கிருஷ்ணசாஸ்திரி.
தர்மசபைகாரியதரிசி.

வேதசாஸ்திரங்களிலுள்ள கர்ம மார்க்கம் ஞானமார்க்கமென்கிறவகைகளை அறியாமல் பிரமிக்கிற பலஜனங்களுடைய சம்சயத்தை நிவர்த்திசெய்ய தஞ்சைநகரத்தில் யேற்ப்பட்டிருக்கிற தர்மசபையார் வேதசமாஜத்தின் முதலாவது விண்ணப்பபுஸ்தகம் முகவுரையில்காட்டிய சர்வகுண சம்பன்னராகிய மேற்படிசமாஜத்தாருக்கு அறிவிக்கிற விண்ணப்பமாவது,எங்களுக்குசொற்களைவளர்த்தி மயங்க அடிப்பதில் அபிப்பிராயமில்லை. கேள்வியும் மறுமொழியாகவும் சாதாரணமான பழக்கமுள்ள வார்த்தைகளாகவும் இருந்தால்மட்டும் மிகவும்சுகமாயிருக்கும். விக்கிரகாராதனை செய்யவேகூடாதென்பது பூர்வபக்ஷியினுடைய அபிப்பிராயமல்லவா? அதில் விஷயசோதனம் பண்ணிபூர்வபக்ஷம் நிலைத்தால் சுவபாவமாகிய கர்மமார்க்கத்தையும் தனிதனியாக ஸ்தாபித்து அதிகாரிபேதத்தையும் ஸ்திரப்படுத்துவோம். அதிலேமயங்கிப்போன பலஜனங்களுடையபுத்தியும் ஸ்திரப்படும்.

### வினாக்கள்.

க. வேதசமாஜமெனனும் சப்தத்துக்கு எதுஅர்த்தம்?அது வேதபரமா? மனுஷியபரமா; இதை லக்ஷணத்தோடு உரைக்கவேண்டும்.

உ. இந்தக்கிரந்தத்துக்குவிஷயம், பிர

யோஜனம், அதிகாரி, இவைகளை தெளிவாய்சொல்லவேண்டும்.

௩. வேதத்தைபிரமாணமென்று ஒப்புக்கொள்ளப் பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட வேதங்கள், எத்தனைக் கிரந்தமுள்ளதுகள்? அதின்தொடக்கமான சப்தமென்ன? முடிவிலுள்ள சப்தமென்ன? அதுமுழுமையும்பிரமாணந்தானா? அதற்காக ஒருவகையான பாஷியம்தானா; பலபேர்களாலேசெய்யப்பட்டபாஷியமுண்டா? இன்னமும்பாஷியம் செய்யலாமா. அப்படியிருந்தால் நீங்களெந்தபாஷியத்தை ஒப்புக்கொள்ளுகிறீர்கள்? இன்னபாஷியத்தையே ஒப்புக்கொள்ளவேண்டுமென்கிற பிரமாணமுண்டா? ஒப்புக்கொள்ளுகிறபாஷியத்தினாலேமாத்திரம்வேதத்தினுடையசமஸ்தவிதமான பிரயோஜனமுள்ளஅர்த்தம் வெளிப்படுமா? அல்லது மற்றக் கிரந்தங்களுடைய அபேக்ஷையுண்டா? அப்படிக்கிருந்தால்அந்தக்கிரந்தங்களுடைய பெயர்என்ன? முகவுரையில்காட்டிய கிருஷ்ணார்ஜுன சம்வாத கீதவாக்கியம்மாத்திரம்உறுதியா? அல்லது அந்தகீதை அடங்கிய பாரதம் பதினெட்டுபருவங்களையும் ஒப்புக் கொள்ளலாமா? ஒப்புக்கொள்ளக்கூடாதென்பதற்கு பிரமாணமுண்டா? ஒருபானைசோற்றிற்குஒருசோறுபதமென்கிற கும்பீபாக நியாயம்போல் பூர்வீகர்களுடையவாயினாலே கிரந்தங்களில் ஒப்புக்கொள்ளப்பட்ட நியாயங்களைமட்டு மெடுத்துக்காட்டினால் மிகவும் அழகாயிருக்கும்; புலிபசித்தால் புல்லைததின்னுமென்கிற சாதாரணசொல்லுகளை யுரைப்பது கிராந்திகாளுடைய சம்மதந்தானா? அப்படிப்பட்டநியாயங்களை சொல்ல நாங்கள் துணியவில்லை.

௪. பிரதிக்ஞையில்கண்டசத்தியவந்தராகியபாமபுருஷன் விரும்புகிறகர்மங்களென்பவைஒருவகையா?பலவகையா? இன்னின்னவைகர்மங்களென்பதற்குஆதாரமுண்டா? விபவ வியூஹங்களும் திருசியமேயாகையால் அவைகளும் இவ்வாக்ஷேபத்துக் குட்பட்டது தானாவென்றாலோ இதுவரையிலுள்ள உங்கள்கிரந்தத்தின் வாக்கியத்துக்கு தெளிவாய் அர்த்தம் தெரியவில்லை. அதையும் அது ஏன் அனுவசியகமோ அதையும் சொல்லவேண்டும்.

௫. சகலதேசங்களிலும் வழங்கிவரும்தர்மசாஸ்திரங்களென்று குறிப்பிடப்பட்டிருக்கிறதே அதின்மேல்வரிகளில் சொல்லப்பட்ட வாதி பிரதிவாதிகளுக்கு உரிமையான வியவகாரகாண்டமாத்திரம் பிரமாணமா? அதில் அடங்கிய எல்லாவசனமும் பிரமாணமா? அப்படிக்கு சிலது அப்பிரமாணமானால் அதின் காரணமென்ன? அனுவசியகமென்றும் அவகாசமில்லையென்றும் சொல்வது பிசகு.

௬. அர்ச்சைஎன்பது ஒருவகையானகிரியை. அது பிரமமென்று உங்களுடையசிநேகிதாள் வாய்மொழியாய் சொன்னார்களா? கிரந்தாதாரமாய் சொன்னார்களா? அப்படிக்கிருந்தா லந்தகிரந்தத்தின் பெயர் என்ன.

௭. அர்ச்சாவிஷய மொன்றுதவிர மற்ற கிரியையெல்லாம் வேதோக்தமாக ஒப்புக்கொள்ளலாமா? ஒப்புக்கொண்டால் செய்யாதவனுக்குபிரத்தியவாயமுண்டா? அப்படி உண்டானால் இந்த பூர்வபக்ஷக்காரர்கள் எல்லாவற்றையு மனுஷ்டித்தார்களா? அனுஷ்டியாமலிருந்தால் அவர்கள் அதிகபிரயாசமுள்ள அருப அனுசந்தானத்தில் அதிகாரிகளென்று நம்பலாமா? இதுவிஷயம் வாயினாலே மட்டும் பிரமமென்று விவரித்தால் போதுமா? அல்லது அவரனுபவமாயிருக்கவேண்டுமா? அப்படிக்குஆனால் அப்பேர்ப்பட்ட அனுபவமுண்டா? அப்படிக்குமுண்டானால் இவவிடத்திலுள்ள சிலமனுஷியர்களுக்கு அந்தஅனுபவத்தை மனசுக்கு பூரவைத்து பிரமரகீடம்போல்பண்ணி அனுப்பவேண்டும். அந்தமனுஷன்பின்புஇவ்விடம்வந்து முன்னிருந்தஸ்திதியில் இருப்பானேயாகில் இந்தபூர்வபக்ஷம் பெரும்வெள்ளத்து மணற்குன்றுதான்.

௮. உத்தரகீதைஎன்பதுஎந்தபுராணத்தில்சேர்ந்தது? பகவத்கீதைஇருவத்தோருஅத்தியாயம்யென்று இந்தஜம்பூதீவில் எந்தபாரதபுஸ்தகத்திலாவது பீஷ்மபர்வத்தில்சேர்த்து எழுதியிருக்கிறதா? அப்படிக்கு எழுதியிருந்தால் அந்தபழையபுஸ்தகத்தை அனுப்பவேண்டும்.

௯. சூத்திரன் பிரதிமாபூஜைக்கு அதிகாரியானால் அவன்எந்தபிரதிமையில் எந்தவிதியினால் எந்தமந்திரம்சொல்லி,எந்ததிரவியத்தைக்கொண்டு பூஜைபண்ணுகிறது? அதற்கென்னபலம்? அர்ச்சையே கூடாதென்று பிரதிக்கினைபண்ணின உங்களுக்கு சூத்திரர்விஷயத்தில்மாத்திரம் பூஜாவிதியை ஒப்புக்கொள்ளும்படி இரக்கமுண்டானது இன்னும்சிலகாலம் புதுசுபுதுசாய் கோவில்கள் கட்டப்படும்.

௧௦. உங்கள் குறிப்பில்கண்டபடி புத்திகெட்டவர்களுக்காவது பூஜையை ஒப்புக்கொண்டீர்களா? சமபுத்தியாயிருக்கிற பிரம்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரவர்ணாதிகளுக்கு அபேதமுண்டாயிருப்பதால் விவாஹ

போஜனுதிகளும் சம்மதந்தானே? மறுபொருளாய் முகவுரையில்கண்ட கும்பகோணம் வித்வாம்ஸர்விஷயம்போல் சொன்னுலது சரியாயிராது. உங்கள்சபை மென்மேலும் விர்த்தியாகி அர்ச்சாமார்க்கம் சுத்தமாய்மறைபட்டு போகவேண்டியதல்லவா? இதற்கு சதுததரமேசொல்லவேணும். பூர்வபக்ஷத்திலகண்டசொற்களை ஆதாரமாய்வைத்துக்கொண்டே ஆக்ஷேபிக்கப்பட்டிருக்கிறதேதவிர வேறில்லை.

கக. சந்கியாவந்தனம் பண்ணவேண்டுமென்கிற ஆதாரத்லைதக்காட்டியும் சூத்திமென்றும்சொல்வது எத்தனைவகை? ஒன்ருபலவா?

கஉ. உபனயனம் முதலானது செய்யவேணுமென்று வேதத்தில் சொல்லியிருக்கிறதா? அந்தகிரியையில் உபயோகிக்கிறமந்திரங்களை யெந்தஆதாரத்தின்பேரில் உபயோகிக்கிறது.

கங. ஸ்காந்தபுராணத்தில் யோகிகளென்றெடுத்துக்காட்டும்பேர்கள்உலகத்தில்எல்லாருமா? அல்லது சிலரா அப்படிக்காளுல் மற்றவர்கள் செய்யும் கர்மம் என்ன?

கச. பாகவதம் மூன்ருவது பதினோராவதுஸ்கந்தத்தி லெடுத்துச்காட்டிய சுலோகமட்டும் பிரமாணமா? அல்லது பனிரண்டுஸ்கந்தமும்பிரமாணமா? சாதாதபவசனமென்று சொல்லப்பட்ட அந்தவசனமட்டும் பிரமாணமா! அப்படிக்காளுல் அதுமாத்திரம் ஸ்மிருதியா? இன்னும் ஸ்மிருதிகளுண்டா? அப்படிக்குண்டானுல் எத்தனைஸ்மிருதி?

கரு. மகாநிர்வாணமென்பது சுருதியா ஸ்மிருதியா புராணமா?புராணங்களும் ஆகமங்களும் எந்தகாலத்திலுண்டாச்சு? என்பதை தெளிவாய் யெழுதவேண்டும். சிலகாலமென்பது போதாது அதின்பிரமாணம் பித்தியக்ஷமா அனுமானமா?

கசு. வேதங்களிலுள்ள மந்திரங்களெல்லாம் இனனின்னகாரியத்துக்கே யேற்படவேண்டியதாய் குறிப்பிடக்கூடுமா? அர்ச்சையில் உபயோகிக்கிற மந்திரங்கள் வேறுகிரியைகளுக்குஉபயோகமுள்ளதென்று தெளிவாய்காட்டக்கூடுமா?

கஎ. அதற்கு சம்மந்தமான இதரதஸ்தவேஜுகளையும்பார்வையிட்டு அந்தவாக்கியத்துக்கு பொருள்செய்ய வேண்டுமென்பது சத்தியந்தானு? அப்படிக்காளுல் இதரதஸ்தாவேஜுகளென்ன?

கஅ. பிம்பத்தைஉபாசிப்பவர்களுக்கு சிக்ஷயுண்டென்று வாஜஸநேய உபநிஷத்து அ - வதுவாக்கியத்தில் எந்தபாகத்திலுலே அர்த்தங் கொள்ளப்பட்டது. (யாதாத்ம்ய ஸூ கூ ஸூவரிதாநி) யென்று துவக்கின வாக்கியார்த்தம் சிஷ்டாசாரத்தை மெய்ப்பிக்கிறபடியால் உங்களுடைய பூர்வபக்ஷம் முழுமையும் துர்பலப்படுகிறது.

உ0. போதாயன ஸ்மிருதியை ஒப்புக்கொண்ட உங்களுக்கு அதில் அவரால் சொலலப்பட்ட பூஜாவிதானத்திலும், மனுஸ்மிருதியில்சொல்லப்பட்ட பூஜாவிதானத்திலும் என்ன தோஷம் நேரிட்டிருக்கிறதோ தெரியவில்லை.

உக. சங்கராசாரியரை ஒப்புக்கொள்ளுகிற நீங்கள் அவர் பூஜைபண்ணினுர் என்று ஒப்புக்கொள்ளுகிறீர்களா இல்லையென்றுசாதிக்கிறீர்களா?

உஉ. தலவகார உபநிஷத்தில் பிரமத்தை அறிவேனென்று சொல்லுகிறவன் அறியமாட்டானென்று உரைத்திருப்பது இந்த பூர்வபக்ஷிகளை முழுதிலும் விரோதிக்கிறது.

உங. வாஜசநேய உபநிஷத்து பனிரண்டாவது வாக்கியத்தில் சொல்லுகிறபடி சிருஷ்டிபதார்த்தத்தைதானே அர்ச்சிக்கவேணுமென்று எந்தபூஜாவிதானத்தில் சொல்லியிருக்கிறது.

உச. முண்டகஉபநிஷத்து முதல் முண்டகம் இரண்டாவது அத்தியாயம் கூ-வது வாக்கியத்தில் சொல்லியபடி போஜனவிவாக கர்மத்தை பூர்வபக்ஷிகள் ஒழித்தார்களா அதுவே ஒழியாதபக்ஷத்தில் அவர்கள் எந்த கருமத்தைவிட்டு பிரமகியானத்தை அறிவார்களென்று நம்பலாம்.

உரு. மனுஸ்மிருதி பனிரெண்டாவது அத்தியாயத்தில் சொல்லிய பெரியோரை பூசித்தல் என்பதற்கு எவ்விதமானபூஜை? அந்த பெரியோர்களுடைய சரீரம் சிருஷ்டியிலகப்பட்டதா வேறுபட்டதா அந்தபூஜைக்குவிதியென்ன?

உசு. விஷ்ணுபுராணத்தில் உதகரித்த ஒருவாக்கியமட்டும்பிரமாணமா அல்லது அது முழுமையும் பிரமாணமா?

உஎ. மற்றும் சுவரூபகதனத்துக்காக எடுத்துகாட்டிய உபநிஷத்துவாக்கியங்களையும் அர்த்தங்களையும் உரைத்தலாகிய வீணுநாதத்தைகேட்டோம். ரொம்பவும் சந்தோஷமாச்சுது.

உஅ. இப்பேர்ப்பட்ட அனுசந்தானமுள்ள சாதுக்களுக்கு மாதா, பிதா, புத்திரன்

அவன் மனைவி மகன் யெல்லாருஞ்சரிதானா.

௨௯. முதலாவது அத்தியாயத்தில் சொல்லியபடி வெகு பிரயாசப்பட்டு பார்வையிட்ட உபநிஷத்துகளில் இந்த விஷயத்தை சொல்லவும் கேட்கவும் அதிகாரிகள் யெடுத்துகாட்டியதுண்டா இதைப்பற்றி கீழ்ஜாதி சாமானியம்பார்க்கும்படி செய்வித்ததில் குற்றமுண்டா இல்லையா?

௩௦. மேலேவந்த கேள்விகளுக்கு சமாதானமாக மற்ற அத்தியாயங்களிலெதாவது சொல்லப்பட்டிருந்தால் இன்னின்னகேள்விக்கு இன்னஅத்தியாயம் இத்தனையாவதுபக்கத்தில் பார்த்துக்கொள்ளென்றும் உத்திரவுசொல்லப்படாத கேள்விகளுககு நூதனமாகவிருக்கிற உத்திரவுகளையுஞ்சொல்லி உங்களுடையஅர்ச்சை கூடாதென்னும் பூர்வபக்ஷத்தை ஸ்தாபித்தாலதின்பேரில அர்ச்சாமார்க்கத்தை சுருதி ஸ்மிருதிகளிலுள்ள அநேகஆதாரங்களினாலே உறுதிப்படுத்த சித்தமாயிருக்கிறோம்.

௩௧. வேதத்தில்ஸ்பஷ்டமாய் விக்கிரகாராதனைசெய்யவேகூடாதென்று ஒருஇடத்திலாவது இருப்பதாகஎடுத்துக்காட்டாமல் அப்பிரமாணம்என்றுநீங்கள் ஒப்புகொள்ளுகிறபுராணாதிகளை“விக்கிரகாராதனைக்குஆதாரமில்லை யென்பதற்கு” சாட்சிகளாகஎடுத்து உரைத்திருக்கிறீர்கள்.

௩௨. வேதத்தைமாத்திரம் பிரமாணமாய் ஒப்புகொண்டு மற்றதுகளை அப்பிரமாணமென்றுதள்ளிவிட்டநீங்கள் உங்கள்விண்ணப்பபுஸ்தகத்தில்நீங்கள்செய்யும் ஒவ்வொரு பூர்வபட்சத்துக்கும் மற்றபுராணாதிகளை நீங்கள்எடுத்து உரைத்திருக்கிறீர்களேதவிரஒவ்வொன்றுக்கும்நீங்கள்ப்பிரமாணம் என்று ஒப்புகாளுகிறவேதத்திலேயே யெடுத்துக்காட்டாதது பெரியபிசகு.

௩௩. விக்கிரகாராதனைசெய்யக்கூடாதென்பதற்கு வேதத்தில் ஸ்பஷ்டமான ஆதாரமிருப்பதாய்நீங்கள் எடுத்துகாட்டுகிறபட்சத்தில் வேதத்தில்விக்கிரகாராதனைசெய்யவேண்டியதற்குள்ள ஆதாரங்களை நீங்கள் எடுத்துக்காட்டசித்தமாயிருக்கிறோம். நீங்கள் சொல்லுகிற ஒவ்வொரு வார்த்தைக்கும் நியாயத்துக்கும் வேதத்தில்மாத்திரம் ஆதாரம் காட்டகோருகிறோம்.

அட்சயவஹூ புரட்டாசிமீ ௨௰ } இங்ஙனம், ☞ கு-கிருஷ்ணசாஸ்திரி, தர்மசபைகாரியதரிசி.

## பட்டுக்கோட்டை

### பிரமசபை.

ஓம்தத்ஸத்.

ம-ா-ா-ஸ்ரீ தத்துவபோதினிகர்த்தரவர்சட்கு.

அன்புள்ளஐயா,

நாளதுமீ ௧௨ உ சனிக்கிழமை மாலைஇந்தவூர் பிரம பஜனைசபையில் நடந்ததைககண்டு யான் ஆநந்தமடைந்ததைப்போலே தங்கள் பத்திரிகையை வாசிப்போரும் இன்புறலாமென்றெண்ணி இந்தவரிகளைத்தங்களுக்கு கெழுதத்துணிவுற்றேன் தகுதியாயிருந்தாலதங்கள்பத்திரிகையிற்சிறிதிடங்கொடுப்பீர்களே.

இச்சபையைச் சேர்ந்தவர்களும் மற்ற சிநேகிதர்களும் சேர்ந்தவுடன்எல்லோரும் எழுந்துநிற்க கேட்பவர்மனதிற்பதியும்படி ஒருவர் சமாஜவந்தனத்தை வாசித்தவுடன் தாயுமானவர் பாடலில்குறித்திருந்தவோர் பாட்டு உருக்கமாய்வாசிக்கப்பட்டு பொருள் சொலலப்பட்டதின் பின், பின்வரும்கடவுள்துதிகிருதிகளில்முன்னதுஇராகதாளத்துடன் பாடப்பட்டது. பிறகு ஒருவரால் அடியில்கண்டபடி யுபநியசிக்கப்பட்டது.

அன்புள்ள சோதரர்களே,

இன்றயதினம் வேதாந்தத்தைப் பற்றி இரண்டொருவார்த்தைகள் சொல்ல வுத்தேசித்திருக்கிறேன். இந்தமஹத்தாகிய விஷயத்தைப்பற்றிப்பேசமுற்றிலும் அசக்தனென்பதையானுணர்ந்திருந்தும் என் குற்றங்குறைகளை அன்புடன்க்ஷமிப்பீர்களென நம்பித்துணிகிறேன். கதைகளில் சொல்லப்பட் டிருக்கிற ஹம்ஸத்தைப்போல் நான்சொல்லுவதிலுள்ள வழுக்களைக்களைந்து குணத்தைக் கிரகிக்கும்படி விநயமாய்க்கேட்டுக்கொள்ளுகிறேன்.

மீமாம்சை, நியாயம் வைசேடிகம்சாங்கியம், யோகம், வேதாந்தம் ஆகிய இவ்வாறு வைதிகசாஸ்திரங்களில வேதாந்தமுமொன்றேயானபோதிலும் அதுவேதங்களின் சாரத்தைத்திரட்டிச்சில சூத்திரங்களாகச் செய்யப்பட்டதான படியினாலே அந்நூல்களிலெல்லாம் மிகச்சிறந்த

தென்றே வொப்புக்கொள்ளப்பட் டிருக்கின்றது. இது வியாச முனிவரால் செய்யப்பட்டதென்பதும், இதற்கு ஸ்ரீமத்சங்கராசாரியரும், ஸ்ரீமத் இராமாநுஜாசாரியரும், ஸ்ரீமத் மத்துவாசாரியரும் பாஷியங்கள் செய்திருக்கின்றனவென்பதும் ஜகத் பிரசித்தம். இம்மூன்று பாஷியக்காரர்களும்தங்கள்தங்கள் சொந்த அபிப்பிராயங்களுக்கியைய முதலவர் அத்துவைதபரமாகவும், நடுவவர் விசிஷ்டாத்துவைத பரமாகவும், சடையவர் துவைத பரமாகவும் பொருள்செய்தனவென்பது மெல்லோர்க்குந்தெரிந்ததே. அத்துவைதமாவது பிரமம் ஒன்றேசத்து (உள்ளது) நமது இந்திரியங்களுக்குப் புலப்படுகிற ஜகத்து மித்தை (இல்லாதது) என்றும் நான்என்னும் ஆத்துமாவே ஈசுவரனாயிருக்க அதுமாயாமயக்கத்தினால்தன்னைமறந்துதான்வேறு, இந்த ஜகத்து வாஸ்தவமாயுள்ளதுஎன்றுநினைக்கிறதென்றும்; இப்படிநினைத்திருக்கும்நிலையேபந்தமென்றும்; இந்நிலைபோய்தானே பரப்பிரமமாகக் காணுவதினால் ஜகத்தில்லாமற்போதல் முக்தியெனவும் கற்பிப்பதாம். விசிஷ்டாத்துவைதமாவது, ஜீவன் வேறு பிரமம்வேறு ஜகத்து உள்ளது எனவும்; முக்திதசையில்ஜீவனுக்கும் பிரமத்திற்கும் ஒருவித ஐக்கியமுண்டெனவும் சொல்லும். துவைதமாவது, ஜீவன்வேறுபிரமம் வேறு ஜகத்து உள்ளது எனவும்; முக்தியிலும் ஜீவனும் பிரமமும் தனித்தனியாக வேயிருக்குமெனவும்சொல்லும். அன்றியும் லிங்கபேதம் ஆத்மாவிலும்உண்டென்றுசொல்லும். இம்மதங்களின் கர்த்தாக்கள் அல்லது பிரவர்த்தகர்கள் தங்கள்தங்கள் அபிப்பிராயத்திற்கு அநுகுணமான வேதசுருதிகளையும் உதஹரித்திருக்கிறது மல்லாமல் வேதங்களின்சிலபாகங்களுக்கும் பாஷியங்களுஞ் செய்திருக்கின்றனவென்பது எல்லோருக்குந்தெரிந்தவிஷயமே. இந்தமூன்றுமதங்களுந்தான்இக்காலத்தில்நமதுநாட்டில் பெரும்பான்மையும் வழங்கி வருகின்றவைகள். இவைகளுக்குள் அத்துவைதம் ஈசுவரனுக்கு அசரீரத்துவமுதலிய உண்மைகளைச்சொல்லுவதால் அது அநேக ஞானிகளால் ஆமோதிக்கப்பட்டும்; ஸமிஸ்கிருதத்திலிருந்த அம்மதக்கிரந்தங்கள் விஸ்தாரமாய் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டும் இந்தப்பிரதேசத்தில் பிரபலமடைந்திருக்கின்றது. மற்றிரண்டு மதங்களும் பலகாரணங்களால் இவ்வளவு பரவுதலையடையாநிமித்தம் வேதாந்தமென்றால்இப்போது நம்மவர் அத்துவைத மென்று சாதாரணமாய்க்கிரகிக்கின்றனர். இவ்வளவு பிராசுரியத்தை யடைந்திருக்கினும் இதுவும் மற்றிரண்டைப்போன்றவொன்றேயல்லதுவேறல்ல. மேலும்நமக்குள்வழங்கிவரும்நூல்கள் பெரும் பான்மையாய் இம்மூன்றிலொருமதத்தையபிமானித்தவர்களாலியற்றப்பட்டாவது உரைசெய்தாவது இருக்கின்றவைகளே. ஆதிக்கிரந்தங்கள் பழயஸமிஸ்கிருத பாஷையிலிருத்தலால் அவைகளின் பொருளைக்கண்டறிவது வடமொழிதெரிந்தவர்களுக்குஞ்சுலபசாத்தியமாயிராமல் விசேஷபரிசிரமத்தால்மாத்திரம் அறியக்கூடியதாயிருக்கின்றது. ஆதலினால் இக்காலத்தில் வேதப்பொருளையறிவதெல்லாம் மேற்சொன்ன வருணக்கண்ணாடிக ளாகிய பாஷியங்களின் மூலமாகவேதான். வேதங்களின்மொத்தத்துணிவும், அததுணிவைச் சுருக்கிச்செய்யப்பட்ட வேதாந்தத்தின்கருத்துமாகிய உண்மையானது ஒன்றாயிருக்குமே யொழிய மூன்றா யிருக்கமாட்டாதல்லவா. ஆனால் யாரேனும் இம்மூன்றும் உண்மையே யென்னும்பக்ஷத்தில், பரஸ்பரம் கொள்கைபேதம்ஏது ? அத்துவைதிவிசிஷ்டாத்துவைதியுடனும், இவ்விருவரும்துவைதியுடனும் ஏன்சண்டையிடுகிறார்கள் ? ஆனால் இம்மூன்றிலும் சத்தியம்கலந்திருக்கலாமாயினும்அவைகளோவ்வொன்றும் முழுதும் சத்தியமதமென்பதற்கிடமில்லை. இந்தத்திரிமதங்களுக்கு மாத்திரமல்லாமல் உலகிலுள்ள சருவமத சம்மதமாயும், எல்லா லிகித வேதங்களினுடையமுடிவாயும் ஆத்தும வேதத்தின் சொந்தக்கருத்தாயுமுள்ளதெதுவோ அதுவே வேதாந்த மென்னலாம். அதுவே கடவுளாலளிக்கப்பட்ட இயல்

பான சத்தியசமயம்.

இந்த உண்மையைத்தேடியறிவது ஒவ்வொருவருக்கும் நீங்கலாக்கடமையாயிருக்கின்றதென்பதை நானெடுத்துச்சொல்வது அநாவசியகம். திருப்தியாகுமட்டும் ஞானத்தையடைந்தால் சத்தியம்கைகூடுமென்பதுவேதவிதியாயிருக்கின்றது. அந்நிய நாட்டாருடைய கொள்கைகளும் சாஸ்த்திரங்களும்இத்தேசத்திற்குவருமுன் நம்முன்னோர்கள் வெகுஇலேசில் அந்தத்திருப்தியையடைந்திருக்கலாமாயினும். நம்முடையகொள்கைகள் வேறுதேசக்கொள்கைகளுடனும், நம்முடையசாஸ்த்திரங்கள்அவர்களுடையசாஸ்திரங்களுடனும்பொருந்தாமல் போர்செய்துகொண்டிருக்கும் இக்காலத்தில், அத்துவைத நூல்களைக் கொண்டேயாவது, வேறுமதக்கிரந்தத்தைத் தனியாய்க் கொண்டாவது உண்மையைக்கண்டறிவது அசாத்தியம்; கோரியதிருப்தியுமடையமாட்டோம். நாமேஒவ்வொருவரும் நடுநிலையில்மனதையிருத்தி, இதுசாத்தியம், இதுமதாவே சத்தினலெழுதப்பட்டது என்று பகுத்து ஒவ்வொருமதநூலையும் சீர்தூக்கிப்பார்த்து மெய்யைக்கண்டறிய வேண்டுமானல் வெகுசிலர்க்கு அதுசாத்தியமாகுமேயல்லாமல் பலர்க்கு அசாத்தியமாயேமுடியும். ஆனல் உண்மையையடைவதற்கு மார்க்கமில்லையென்பது என்கருத்தல்ல. அதையடையவேண்டிய தற்காக நாம் செய்யவேண்டுவதொன்றுண்டு. அதாவது நாம் தருமநெறிகளையநுஷ்டித்தவர்களாய் மனோவாக்குக்காயங்களை பரிசுத்தநிலைமையில்வைக்க முயன்றுகொண்டு சத்தியத்தை யறியவேணுமென்கிற வணக்கமான பிராத்தனையுடன், உலகிலுள்ளவெல்லாமதங்களின் சாரததைக்கிரகித்து லோகோபகாரமாய் உள்ளதைத்தெரிவிக்கவேணுமென்றுநாளும்முயற்சிசெய்துவருகிற பிரமஸமாஜத்தார்வேதசமாஜத்தாருடைய சகாயத்தைப்பெற்று, நாமும் சிந்தித்து வருவோமாயின் அதுகைகூடுமென்பதற்கையமில்லை. இந்தநன்முயற்சிசெய்துவருகிறமகாநுபாவர்களுக்குகருணாநிதியாகிய கடவுள் நீண்டவாயுளையும் சக்கதியையும் கொடுத்தருள்வாராக ! நாம் ஒவ்வொருவரும் நம்மவர்களெல்லோரும் சத்தியத்தையறிந்து சத்தியமார்க்கத்தையநுஷ்டித்து அவரது நித்தியபரிபூரணாநந்தத்தின் ஒருதிவலையையாவது அடையும்படி கிருபைபுரிவாராக ; என்று சொல்லிமுடித்த உடனே தோத்திரபுஸ்தகத்திலுள்ள ஒருதோத்திரம்ஒருவராலும், தாயுமானவர் பாடலொன்று வேறொருவராலும் வாசிக்கப்பட்டபின் அடியில் வரைந்திருக்கும் மறறொருகீர்த்தனமும் சரியானஇசையில் மனதுருகும் படிமற்றொருவரால் பாடப்பட்டபோது அவருடன்சபையிலிருந்த வேறு சிலரும் கலந்துகொண்டனர்.

இதுமுடிந்தவுடன் இன்னொருவர் பிரமதருமம் முதற்கண்டத்தின் சூவது அத்தியாயத்திலோர் பாகத்தை வாசித்துதெளிவாயும் விரிவாயும் அர்த்தஞ்சொன்னர்.இப்படியேபின்னுமிரண்டொரு முறை வாசித்தும்பாடியும் பிரமதருமத்தில்ஷெ அத்தியாயத்தின் மற்றப்பகுதியும் பலதிருஷ்டாந்தங்களுடன் பொருள்சொல்லப்பட்டபின் எல்லோருமெழுந்துநிற்கஅருளடக்கம் என்னும் ஸ்தோத்திரம் வாசித்துமுடித்துக்கலைந்தனர்.

இங்ஙனம், கண்டுகளித்தோன்.

---

ம-ள-ள- ஸ்ரீ தத்துவபோதினிபத்திராதிபரவர்கட்கு,

அன்புள்ளஐயா.

வேதஸமாஜத்தார் துவகத்தில் வேதங்களில் மறைவாய்க்கிடந்த பொருள்களைப்பிரவசனம் செய்யும்பொருட்டும், வேதக்கொள்கைக்குமாறாய் அதின்மேற்படர்ந்து அதின்சொரூபத்தைமுற்றிலும்வேறுபடுத்தியும் அதைவேருடனழிக்க ஆயத்தப்பட்டுமிருந்த புல்லுருவிகளாகிய விக்கிரகாரதனம் முதலிய ஆசாரங்களைக்களைந்துபரிசுத்தமான பிரமோபாசனையை பூர்வத்தில் நம்முன்னோர்களுக்குள்ளிருந்தபடி நிலைநிறுத்தவும்மற்றும்நம்முடையசிலவழக்கங்களையும் சீர்ப்படுத்தவு

ம் முயற்சிசெய்யவென்று சேர்ந்தபோது அச்சபைக்கு வேதசமாஜமெனப் பெயர் வகித்தபோதிலும், பிற்பட்டு அச்சபையாரில் பலர்கூடிச்செய்துவரும்பஜனைசபைக்கு என்னபெயரிட்டிருக்கிறார்களோதெரியவில்லை. அதுதெரிந்தால் வெளிப்பிரதேசத்தில் இரண்டோரிடங்களில் உண்டாயிருக்கிற பிரமசபைகளும் அப்பெயராலேயே வழங்கப்படலாம். வங்காளம், வடமேற்குமாகாணங்கள், பஞ்சாப்பு முதலிய பிரதேசங்களிலேற்பட்டிருக்கும்பிரமபஜனைசபைகள் சுமார்நாற்பதுக்கு மேற்பட்டிருக்கின்றன. அவைகளொவ்வொன்றும் பிரமோபாசகர்களுடைய சபையெனப்பொருள்தரும்பிராம்மஸமாஜம் என்னும்பெயரால் அழைக்கப்படுகின்றது. இந்தப்பிரதேசங்களிலுண்டாகும் ஸமாஜங்களுமதேபெயரால் வியவகரிக்கப்பட்டால் இந்துதேசத்தில் பலபாகங்களிலுள்ளசனங்களுள் பரஸ்பரநேசமும் ஐகமத்தியமு முண்டாவதற்குமிகவு முபயுக்தமாயிருக்குமென்று விநயமாய்சூசனைசெய்யும்.

தங்கள்விதேயன் சந்தேகி.

## அறிவிப்பு.

இத்தடவை கால சங்கோசத்தினாலும், சிலஅநிவாரியஅசந்தர்ப்பங்களாலும், பெருமைபொருந்திய - மிஸ் - மேரிகார்பெண்டர்என்னும் சீமாட்டியைப்பற்றியெழுதவேண்டியமற்றசரிதையைப்பிரசுரப்படுத்தவும், நிருபங்களில் விடைவிரும்புமவற்றிற்கு விடைதரவும் அநுகூலப்படாமல் போயிற்று. வருகிறவிசையவற்றை பரிபூர்த்திசெய்வோம்.

பட்டுக்கோட்டைபிரமசபையின் கிருதிகள்.

### இராகம் - கனடா - அடதாளசாப்பு.

பல்லவி.

பஜி பஜிஸ், தாபகவானை.

அநுபல்லவி.

உசித பிரம்மாநந்த முனக்குண்டுநிதம்................(பஜி.)

சரணங்கள்.

௧. நிர்மலத்தியான - நிஷ்டையைக்கூடி,
கர்மத்தைமுற்றும் - களைக்கவழிதேடி..........(பஜிநீ.)

௨. ஏகனைநாடி - இன்பத்தைக்கூடி,
மோகத்தைச்சாடி - முக்தியைநீதேடி.............(பஜிநீ)

௩. இதயமதிலே - இலங்குநாதனை,
நிதமுந்துதித்து - நீக்குவாய்வேதனை............(பஜிநீ.)

### இராகம் - செஞ்சுருட்டி - ரூபகதாளம்.

பல்லவி.

சிந்தனைசெய்வாய் - மனமே. சிந்தனைசெய்வாய்

அநுபல்லவி.

இந்தவெளிமுதலாகியபூதங்க, ளெல்லாம்
படைத்தமெய்ப்பின்டக்கடவுளை.........(சிந்தனைசெய்.)

சரணங்கள்.

க. அண்டகோடிநிறைந்ததனிற்கு,
மப்புறமாய்நித்திய அவ்வியக்தரூபமாய்,
கண்டமில்லாதந்தக் கடவுளைநிதம்,
கலந்தின்பமுறக்கசிந்துருகி ..........(சிந்தனைசெய்.)

உ. சராசரங்களிரண்டையும்படைத்து,
தன்னுருகாட்டாமல் தனித்துவியாபித்து,
நிறமுருவமில்லாதவகளங்க,
நித்தியாநந்தனை நின்னுள நிந்து .......(சிந்தனைசெய்.)

ரு. அறிவுக்கறிவாகிய அண்ணலை,
அறிந்தவனே அமிர்தனுவன்,
குறியற்றுன்னுள் குடிகொண்டவந்தக்
குற்றமில்லான்பதம் சித்தமதிற்கொண்டு.(சிந்தனைசெய்.)

இங்ஙனம், கண்டுகளித்தோன்.

ஓம் வ ா வ ஹ ெண ந ஃ.

அம்பரந்தனிற்சிறந்த இம்பருவகில்நிறைந்த,
அந்தகாரத்தைநீக்கும் சந்திராதித்தர்போல,
அஞ்ஞானஇருளைநீக்கும் மெய்ஞ்ஞானவொளியைநாட்டும்,
அகமகிழ்தத்துவத்தை வகையாய்விரித்துரைக்கும்,
அருமையாம்பத்திரத்தைப் பெருமையாய்வரைபவர்க்கு,
அன்புடன்வந்தனம் இன்புடன்தந்தனம்.

ஐயா!! ??

அடியில்யாண்வரையும் சிலவரிகளைத்தங்கள்பத்திரிகையில் ஓர்ஓரத்தில் பிரசுரம்செய்யும்படியாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

தஞ்சாவூரில் சென்றமாதத்தில் இரண்டுசனிக்கிழமைகளில், சமாஜத்தைச்சேர்ந்தவர்களில் ஒருவரும், இவ்விடத்திய, கிராண்டுபள்ளிக்கூடத்தில் ஓர் உபாத்தியாயருமாகிய வே. கோபாலசாமிபிள்ளையவர்களால் இதனடியில் எழுதப்பட்டிருக்கிறஇரண்டுகீர்த்தனங்கள் பாடப்பட்டன. பிறகுவழக்கப்படி சமாஜத்திற்குரிய கைங்கரியங்கள் நடத்தப்பட்டு, ஸம்பூர்ணமாயிற்று.

கீர்த்தனங்கள்.

## இராகம்-பியாகடை-அடதாளம்.

பல்லவி.

பொன்னுனநெஞ்சேயுனக்கென்னபுத்திசொல்லினும்
பொறிவழியிலேன்போகிருய்-ஐம்பொறிவழியிலேன்போகிருய்.

அநுபல்லவி.

இன்னும்நல்லரவங்கள் இதமாம்சப்தத்தைக்கேட்டு
மூன்னமேசென்றதுமோசமெனக்கண்டும்...(பொன்னுன.)

சரணங்கள்.

க. நாட்டில்வாழும்பெரும் கரிகள்மதமிகுத்து,
நாட்டமாய்ப்பிடிபிடம் நாடிஸ்பரிசத்தாலும்,
வீட்டின்ஒளிவிளக்கை வீயெனச்சலபங்கள்,
ஒட்டமாய்ரூபத்தால் ஒடுங்குவதினைக்கண்டும்......(பொன்னுன.)

உ. சற்றும்அறிவில்மூடர் தம்தூண்டில்புழுவினை,
தானேகின்னக்கயல்கள் தவித்துரசத்தினுலும்,
சுற்றும்பிரமரங்கள் சுழன்றுதாமரைதனை,
நத்திகந்தத்தினுலே நாசமாவதைக்கண்டும்... ... ...(பொன்னுன.)

௩. ஆதியநாதியாகி யணுவிற்கணுவுமாகி,
சோதியாயண்டமெங்கும் துலங்கும்பரிபூரணனை,
நீதியாயனுதினம் நினைத்தால்நமதான்மா,
வேதனையில்லாமல் விளங்கும்மோக்ஷத்திலென்றும்.(பொன்னுன.)

## இராகம் - காம்போதி - அடதாளம்.

பல்லவி.

பிறந்துபிறந்துசுகம்பெற்றதுபோதும்,
பிறவாநெறிகேளாய் _ பேய்மனமே.

அனுபல்லவி.

வரந்தரும்பிரமத்தால் வழங்கும்சுருதிப்படி,
மனந்தனிலேநினைந்து வணங்கிடவாமல்.............(பிறந்து.)

சரணங்கள்.

க. பரமன்தன்னருளினல் பலவற்றையும்நம்போல்,
படைக்கவதினிற்சில பழுதாமுருக்களை,
சிரம்கரம்கண்மூக்குச் செவிகளைச்செய்துநாமே,
வரந்தருவாயெனவணங்கியறிவழிந்தும்..................(பிறந்து.)

உ. மனத்தின்பாவமூன்றும் வாக்கின்பாவநான்கும்,
மாயைசரீரத்தின் பாவமூன்றுமிவை,
அனைத்தும்பிறவிக்கு அகவிடமெனஉன்னி,
கணப்போதாகிலும் பிறமன்கழல்பணியாமல்இன்னம். (பிறந்து.)

௩. சராசரத்தில்தரிக்கும் தோற்றம்நான்கும்,
தரம்பாமல்உணவினைத் தந்துகாத்தருள்கின்ற,
பரமன்ஏகன் எங்கும்பரவும்பரிபூர்ணனும்,
பிரமத்தியானத்தால் பிரியமாய்க்காணுமல்............(பிறந்து

இங்ஙனம், தங்கள்விதேயன், சுப்பராயபிள்ளை.

---

தனியான, ஒப்பற்ற, மெய்யறிவநந்த பிரமம், சாந்திபூர்ணம், அமிருதம், அதுஉருவும்குற்றமுமற்றது. இதையறிந்தவர்அமிருதராவார்; மற்றவர்துக்கமேயடைவார்.

மெய்யேவெல்லும், பொய்யல்ல.

---

...ப்பட்டணம்,—தத்துவபோதினி அச்சுக்கூடத்தில், கா. தெய்வசிகாமணி முதலி...ரால், பதிப்பிக்கப்பட்டது.